©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY

PUBLISHED BY AUTHORITY

No. 356] CHENNAI, THURSDAY, SEPTEMBER 22, 2011
Purattasi 5, Thiruvalluvar Aandu–2042

# Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை.**

**திருவண்ணாமலை மாவட்டம், புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், வடமாத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந. க. எண் 2444/2011/அ2.)*

**No. VI(2)/468(c)/2011.**

திருவண்ணாமலை மாவட்டம், புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், வடமாத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி நீ. தனபாக்கியம் என்பவர் ஊராட்சிக்குத் தேவையான தெருவிளக்கு உதிரிபாகங்கள், கைப்பம்பு மற்றும் விசைபம்பு உதிரிபாகங்கள் வாங்கியமைக்கான தொகையினை சம்மந்தப்பட்ட நிறுவனத்தின் பெயருக்கான குறுக்கு கோடிட்ட காசோலையாக வழங்க வேண்டும் என்ற நடைமுறை விதிகளைப்பின்பற்றத் தவறி ஊராட்சி நிதியினை கையாடல் செய்தமைக்காகவும் கைபம்பு மற்றும் விசைபம்பு பராமரிப்புக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச வரம்பிற்கும் கூடுதலான செலவினம் மேற்கொண்டதோடு பட்டியலில் உதவி பொறியாளரின் மேலொப்பம் பெற தவறியமைக்காகவும் ஊராட்சிக்குத் தேவையான தெருவிளக்கு உதிரிபாகங்கள் வாங்கும்போது திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி (Open Tender) மற்றும் ஒப்பந்த விலைப்புள்ளி (Limited Tender) நடைமுறைகள் ஏதும் பின்பற்றப்படாமல் தன்னிச்சையாக செயல்பட்டு செலவினம் மேற்கொண்டமைக்காகவும், தமிழ்நாடு ஊராட்சிகள் (வேலைகளுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்தல் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகள்) விதிகள், 2007—க்கு முரணாக பணிகள் மேற்கொண்டு ஊராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தியமைக்காகவும் அவருக்கெதிராக 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 205—ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்ட பின்னர் அவரின் மீதான குற்றச்சாட்டுக்கள், வடமாத்தூர் ஊராட்சி மன்றத்தின் கருத்து ஆகியனவற்றை உரிய ஆவணங்களுடன் தன்னிச்சையாகவும் ஆழ்ந்தும் பரிசீலனை செய்து, இவர் மேற்காணும் பிழைகள் புரிந்து ஊராட்சி நிர்வாக அலுவலர்/ ஊராட்சி மன்றத் தலைவருக்கான கடமையிலிருந்து தவறியுள்ளது நிரூபணமாவதாக எனது உளத் தேர்வின்படி தீர்மானித்து, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 205(11)—ன்கீழ் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இவரை வடமாத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 262(1)—ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இந்த அறிவிக்கை நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை,
2011 செப்டம்பர் 21.

**அன்சுல் மிஸ்ரா,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-2 Ex. (356)